திராவிடன்

வாரவெளியீடு ஆசிரியர் என்.வி.நடராசன்

மாலை 1 மலர் 42 | 6-6-48 ஞாயிறு | விலை அணா 1½

தேவலோக சட்ட சபையில் விநாயகர் "வாக்கவுட்!"

இரவு 9-மணி; தேவலோகத்தில் மும்மூர்த்திகளும் கூடி பூலோகத்தின் ஆகஸ்டு சுயராஜ்ய வலாறுகளைப் பற்றி அலசிக் கொண்டிருந்தனர். இந்த சமயத்தில் 'சுப்புலட்சுமி' மாடலில் நாரதர் வருகிறார்.

சிவன்:—வாரும், நாரதரே! பூலோகச் செய்தி ஏதாகிலும் உண்டோ?

நா:—அதைச் சொல்லவே ஓடோடியும் வந்தேன்; நமது ராஜாஜி இருக்கிறாரே!

விஷ்ணு:—இல்லாது எங்கு போய்விட்டார், சீக்கிரம் சொல்லுங்காணும்.

நா:—மன்னிக்கணும், அவசரப்படாதீர்; ராஜாஜி கவர்னர் ஜெனரலாகிவிட்டார்!

பிரம்மா:—என்னய்யா நாரதரே விளையாடுகிறீரா? இது பழைய சங்கதிதானே அப்-டு-டேட் விடயமாக ஒன்றும் கேள்விப்படவில்லையோ.

நா:—அதைத் தான் இனி சொல்லப் போகிறேன். அவர்கள் இருவரையும் இருகப் பிடித்துக் கொள்ளுங்கள்

பிர:—ஏன்? எதற்காக?

நா:—இந்த சு. ம. கேள்வியைக் கேட்காதீர், தயவுசெய்து நான் சொல்லியபடி செய்யுங்கள்.

திடீரென பிரம்மா, சிவனையும் விஷ்ணுவையு சேர்த்து கட்டிக் கொள்ள, விடயம் புரியாது இருவரும் விழிக்கலாயினர்.

நா:—அரிஅரன்களே, பிரம்மாவை முறைக்காதீர்கள். நான் தான் இவ்வாறு இருகப் பிடிக்கச் சொல்லி வேண்டிக்கொண்டேன். ஏனெனில் நான் கூறப்போகும் செய்தி உங்களை திடுக்கிடச் செய்யும்.

சிவ:—ஓய் நாரதரே! சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற புத்தி உமக்கில்லையா, விரைவில் முடியுமய்யா உமது விவரத்தை.

நா:—இதோ முடித்துவிடுகிறேன். பூலோகத்தில் யாரோ ஒரு ராமசாமிப் பெரியாராம்; இவர் 30-ஆண்டுகளாக மக்களிடையே பகுத்தறிவியக்கம் என்ற பேரால் பெரும மாறுதலை உண்டாக்கி வருகிறாராம். அதன் எதிரொலியாக இன்று கடவுளர்களாகிய உங்களைச் சுமப்பதே அறிவுக்குப் பொறுத்தமில்லை என்றால், கோயில் பூசாரிகளாகிய பார்ப்பனர்களையுமா சுமப்பது? எனவே பார்ப்பனர்கள் இறங்காவிட்டால்; வாகனங்களில் உங்களைச் சுமக்கமாட்டோம் என்று நாடெங்கும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டு வருவதுடன் சில இடங்களில் (இது சமயம் நாரதர் தேம்பித் தேம்பி அழுகிறார்)

உடனே விஷ்ணு குறுக்கிட்டு நாரதரை நோக்கி "அடித்தாரும்மை நீர் அழுவதேனய்யா" என்ற பாடலை முகாரி ராகத்தில் பாடி துக்கம் விசாரிக்க, அதன் பின் நாரதரும் சற்று துக்கம் தணிந்தவராய் மேலும் தொடர்ந்து கூறுகிறார்;

அரிஅர பிரம்மாதிகளே, நான் வோருன்றுக்கும் அழவில்லை இந்தக் கோயில் பூசாரிகள்மீது கோபப்பட்டு, உங்களையெல்லாம் நடுத்தெருவில் கைவிட்டு வருகிறார்களே. அத்துடனாவது இந்த கோயில் நிர்வாகிகள் சும்மாயிருத்தல் கூடாதா? போதாக் குறைக்கு எரிகிற கொள்ளிக்கு எண்ணெய்

எமதர்மரின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று!

தெளித்தது போன்று உங்களை யெல்லாம் மாட்டு வண்டியில் கட்டிபோட்டு இழுத்துச் சென்று உமது இல்லங்களில் (கோயில்களில்) சேர்க்கின்றனராம்.

சிவ:—(நெற்றிக் கண்ணைக் காட்டி நெளிந்துகொண்டு) ஆஹா என்ன ஆணவம்! மாட்டு வண்டியிலா எங்களை அமர்த்தி மானம வாங்குகின்றனர். இதோ அகோரத் தாண்டவம் புரிந்து அதோகதியாக்குகிறேன், பூலோகத்தை!

விஷ்:—சிவனாரே! சிந்தை கலங்கவேண்டாம்! எய்தவனிருக்க அம்பை நோவதில் பயனில்லை. ராமசாமிப் பெரியார் பேச்சைக் கேட்டு நமது பூசாரிகளைத் தூக்கமாட்டோம் என்ற பிரச்னைமீது நம்மை நடுத்தெருவில் விட்டவர்களைப்பற்றி இவ்வளவு கோபப்படுகின்றீர்களே! ஆகஸ்டு சுயராஜ்ய சர்க்காரின் ஆணவத்தைப் பற்றி ஆராய வேண்டாமா?

நம்மை மாட்டு வண்டியில் வைத்து இழுத்துச் செல்லும் அதே நேரத்தில் ஆகஸ்டு சுயராஜ்ய ஆட்சி பீடந்தாங்கிகளுக்கு ஆகாயவிமானம் வாங்கப்பட்டுள்ளதாமே! இது எவ்வளவு பெரிய துரோகம், நன்றிகெட்டசெய்கை, நமக்கு ஆகாயவிமானமில்லாவிட்டாலும் பெரிய லாரியாவது வாங்கியிருக்கக் கூடாதா?

பிர:—அய்யகோ! வேண்டாம், வேண்டாம்; லாரியையும் ஜீப்கார்களையும் சர்க்காரிடம் ஒபபடைத்துவிட வேண்டும் என்று புதிய சட்டம் ஒன்று அங்கு சமைக்கப் பட்டுள்ளதாம்!

சிவ:—அவ்விதமானல் ஒரு பெரிய பிரத்தியேக மோட்டார் வாங்கக்கூடாதா? மைத்துனர் நாராயணனாரே நீங்கள் சொல்வதில் உண்மைத் தாண்டவமாடுவதால், எனது அகோரத் தாண்டவத்தை நிறுத்திக் கொள்கிறேன். இனி இந்த பிரச்னையை நாம் எப்படி தீர்ப்பது நீரே சொல்லும்!

மும்மூர்த்திகளும் தங்களது மண்டைகளை உருட்டி உருட்டிப் பார்த்தும் வழி கண்டு பிடிக்க முடியவில்லை. கடைசியாக நாரதரின் யோசனையின் மீது தேவலோகசட்டசபையைக்கூட்டி இந்த பிரச்னையைத் தீர்ப்பது என்று முடிவு கட்டினர்.

சட்ட சபையின் சர்க்கார் கட்சித் தலைவர் எமதர்மருக்கும் இது விடயம் தெரிவிக்கப்பட்டது.

காட்சி: 2

மூன்ரும் நாள் காலை 11-மணி தேவலோக சட்டசபையில் நுழையவும் இடமில்லை. சட்டசபையின் அவசரக் கூட்ட நடவடிக்கைகளை கவனிக்க விசிட்டர் காலரியில் ஏராளமானவர்கள் வந்திருந்தனர். விசேஷ கவனிப்பாளர்களாக பார்வதி—லட்சுமி—சரஸ்வதி அம்மையார்களும், காலரியில் அமர்ந்திருந்தனர்.

சபையின் விசேஷபாதுகாவலர்களாக எருமைக் கிடாமீது எமதர்மனும், பெருச்சாளிமீது பிள்ளையாரும் உட்கார்ந்து சுறுசுறுப்பாக சுற்றித் திரிந்துவிட்டு, சபை ஆரம்பமானதும் வந்தமர்ந்தனர்.

சபைத் தலைவர், தேவேந்திரன் முதன்முதலாக, சபைகூடியதின் அவசரக் காரியத்தை எடுத்துக் கூறியதும் ஒரே பரபரப்பு ஏற்பட்டது;

"பூலோக மானிடர்க்கு இவ்வளவு ஆணவம் உண்டாவதற்கு முதல்காரணமாயிருந்த ராமசாமிப் பெரியார் என்பவரை பழிக்குப் பழி வாங்க பதினோராவது அவதாரம் எடுக்குமாறு விஷ்ணுவைக் கேட்டுக் கொள்கிறேன்" என்ற தீர்மானத்தைப் பிள்ளையார் கொண்டுவந்து முன்மொழிந்தார். இதை வழிமொழிய எவரும் முன் வராததால் பிள்ளையார் "வாக்கவுட்" செய்து வெளியேறினர்.

அடுத்தபடியாக, முருகர் எழுந்து கீழ்வரும் தீர்மானத்தை முன்மொழிய பிரம்மா வழிமொழிந்தார்.

"பூலோகத்தில் கடவுடளர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி நேரு சர்க்காரிடமும், பட்டேல் துரையிடமும் விவாதிக்க எமதர்மரைத் தலைவராகக் கொண்ட ஒரு தூதுகோஷ்டியை அனுப்புவதென இச்சபை தீர்மானிக்கிறது"

உடனே எமதர்மர் எழுந்திருந்து (கோபத்துடன்) தூதுகோஷ்டிகள் அனுப்புவதில் பயனில்லையென்றும், சில சமயங்களில் அது ஆபத்தையே உண்டாக்குகிறதென்றும், உதாரணமாக பூலோகத்தில் காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக (மாஜிசா) கோபால்சாமி அய்யங்கார் தலைமையில் ஐக்கிய நாட்டுகவுன்சிலுக்கு தூதுகோஷ்டி சென்று அதனால் ஏற்பட்ட தோல்வியை எடுத்துக் கூறியதுடன், அதற்குப் பதிலாக நாமே ஒரு முடிவுசெய்து அதை நமது அம்பாசதார் (தூதுவர்) மூலமாக நேரு சர்க்காருக்கு அனுப்பி வைத்து அதை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வருமாறு உத்திரவிடுதல் வேண்டும்" என்று முழக்கம் செய்தார். தேவலோக சட்டசபை மண்டபமே இடிந்து

12-ம் பககம் பார்க்க

"பத்த அனுமான்"

தலைப்பைக் கண்டவுடனே காலஞ்சென்ற தோழர் வி. எ. செல்லப்பா நடித்த பக்த அனுமான் என்ற சினிமாக் கதையின் விமர்சனம் என்று கருதிவிடாதீர்கள்.

ஃ ஃ

நமது சென்னை மாகாண ஆட்சி பீடந்தாங்கிகள் இருக்கின்றார்களே, இவர்கள் அடிக்கடி வடநாட்டுக்குக் காவடி தூக்கிச் செல்கின்றார்களல்லவா! அதற்காக இவர்களைத் தாங்கிச் செல்ல ஒரு ஆகாய விமானத்தை, மக்களின் வரிப்பணத்திலிருந்து (தரித்திர நாராயணன்களல்லவா) வாங்கினராம். அதற்கு என்ன பெயரிடுவதென்று என்னென்ன யோசனை செய்தார்களோ அறியேன், அப்பாடா! கடைசியாக தங்களது மூளையை உருட்டி கடைந்தெடுத்த கருத்திற்கேற்ப அவ்விமானத்துக்கு "அனுமான்" என்று நாமகரணம்" சூட்டினார்களாம்.

ஃ ஃ

இப்படியல்லவோ இருக்க வேண்டும் புத்தி, 1948-ல் ஆட்சி புரியும் ஆளவந்தார்களுக்கு. பாருங்கள் என்ன பொருத்தம்! இப்போது நடப்பது 'ராமராஜ்யம்' மந்திரிகள் பறப்பது 'அனுமான்' மீது.

ராமர ஜ்ப அனுமான் பறந்து சென்று இலங்கைக்குத் தீயிட்டதாகக் கதை. ஆனால் தென்னாட்டிலிருந்து புறப்படும் இந்த "அனுமான்" எந்த நாட்டுக்குத் தீவைக்குமோ! இந்த பொருத்தத்தை இந்திய டொமீனியன் ஆட்சியாளர் உடனடியாகப் பார்க்க வேண்டுவது மிக மிக அவசியமாகும். ஒருக்கால் அவர்களுக்கு அதற்குத் தகுந்த ஆள் கிடைக்கவில்லையென்றால் காந்தியார் உயிரை எழுப்ப வந்த "சாமி"யாரை அழைத்து வருமாறு நமது டாக்டர் அழகப்பாவுக்கு சிபார்சுசெய்கிறேன்.

ஃ ஃ

அட கண்றாவியே! நமது முதலமைச்சர் ஓமந்தூராரை நான் என்னமோ என்று நினைத்திருந்தேன் கடைசியில் பெரிய 'வண்டலிஸ" மாகயிருக்கிறாரே! இந்த விமானத்துக்கு, அறிவுக்கும் காலத்திற்கு மேற்ற பெயரா பஞ்சமாகிவிட்டது;

திராவிடத்தின் நீர் பரப்பிலே கப்பலோட்டிய வீரத்தமிழன் என்று புகழ் மிகப்பெற்று வாழ்ந்த சிதம்பரனார், உழைப்பாளிகளின் உற்ற நண்பராயிருந்த அடக்குமுறைக் கஞ்சா சிங்கம் சிங்காரவேலர், வீரன் குமரன் போன்றாரின் நினைவாகப் பெயரிடுதல் கூடாதா? மக்களை மடமையிலிருந்து தட்டி எழுப்பிய பெரியார் ராமசாமி அவர்களின் பெயரை இம்மளவு நன்றியுள்ள புத்தியில்லாவிட்டாலும் மற்ற திராவிடத்தியாகிகளின்பெயராலாகிலும் அவ்விமானத்தை அழைத்தல் கூடாதா? கக்கூஸ்களுக்கெல்லாம் ராஜாஜி பெயர் அடிபடும் போது இவ்விமானம் அவர் பெயரையாவது தாங்கியிருத்தலாகாதா? அல்லது உத்தமர் காந்தியார் பெயரையாவது வழங்கியிருக்கலாமன்றோ! நாட்டுக்கு வழி காட்டி வந்த அவர் இந்த விமானத்துக்காகிலும் நல்வழி காட்டுவாரல்லவா? குறைந்தது ஓமந்தூரார் அல்லது சுப்பராயன், காமராஜர், பிரகாசம் போன்றவர்களின் பெயரையாகிலும் இட்டிருக்கலாமே?

ஃ ஃ

அனைத்தையும் விடுத்து, அனுமார் பெயர்தானா கிடைத்தது? குரங்கு பருவத்திலிருந்து எத்தனையோ மாற்றங்களடைந்து மனித பருவத்தைத் தாங்கி அதுவும் பகுத்தறிவு பெற்று வரும் இந்நாளில் நம் ஆட்சிபீட விமானத்துக்குப் பெயரிடுதலில் மீண்டும் குரங்கு புத்திக்கா செல்வது! சே! சே! ஆகஸ்டு ஆட்சி இப்படியா அறிவையே பாழ் படுத்தும்?

ஃ ஃ

வீரர்கள், பெரியார்கள் பெயர்களை வைத்து அதன் மீது சவாரி செய்தல் மரியாதைக் குறைவு என்று கருதியிருந்தால்' "கோட்ஸே" என்றாவதுவைத்து தொலைப்பதுதானே? காந்தியாரை கொன்ற பழிக்குப்பழியாக உன் மீது சவாரி செய்து வஞ்சந் தீர்த்துக் கொள்கிறோம் என்று விளக்கம் கூறலாமல்லவா?

ஃ ஃ

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கடியேன், ஆச்சாரியார் திருவடிகளே சரணம் என்ற அடிமை சிந்து பாடும் புத்தி ஆட்சி பீடம் ஏறினாலும் விடுமா என்ன?

ஃ ஃ

இன்னும் நான்கைந்து விமானங்கள் வாங்கி "சாயிபாபா" "இயற்பகை நாயினார்" "வல்லாள மகாராஜன்" "கபீரதாஸ்" போன்ற பெயர்களை வைத்து விட்டால் அரசியலாரின் "விஞ்ஞான" புத்திக்கு சிகரம் வைத்தது போன்றாகிவிடுமல்லவா!

மாதம் ரூ. 500

முதல் 2000-க்கு மேல் சம்பாதிக்கலாம். லாபகரமானது. கௌரவமானது. முழு விவரம் நிபந்தனைக்கு ரூ. 3. M. O. அனுப்புக.

வெற்றிவேல் கம்பெனி
தபால் பெட்டி-3,
திருநெல்வேலி, சீமை.

"திருகு தாளம்"

S. கஜேந்திரன், B.A.

''தமிழ்மணி'' என்ற வாரப்பத்திரிகையின் 16—ஆம் தேதி இதழைக் கண்ணுற்றேன். 'அங்கும் இங்கும்' என்ற தலைப்பில் 3—ஆம் பக்கத்தில் வெளியாகியிருந்த விஷயம் என் கவனத்தைக் கவர்ந்தது பத்திரிகா தர்மம் இவ்வளவு தலைகீழ் மாறுதலுடன் 'சுதந்திர' நாட்டில் நடைபெறுவதைக்காண நான் வியப்படைந்தேன்.

மே மாதம், 5—ஆம் தேதியன்று கோவை அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்கள் கைத் தொழில் போர்டாரை வரவேற்று உபசரித்தார். அவ்வமயம் அவர்நிகழ்த்திய சொற்பொழிவைசாக்காகவைத்து 'காங்கிரஸ் சர்க்கார் மீது வசைமாரி பொழிவதாக' அவர் மீது குற்றம் காட்டியிருக்கிறார் நிலையான, சரியான கொள்கையற்ற 'மணி'யின் ஆசிரியர்.

(1) 5-ஆம்தேதி ஜி. டி. நாயுடு அவர்கள் நிகழ்த்திய அறிவுக்களஞ்சியமான சொற்பொழிவை சரியாக உணர்ந்து கொள்ளவில்லை,

அல்லது

(2) 5-ஆம் தேதி சொற்பொழிவைத் தவிர, ஜி. டி. நாயுடு அவர்களுடைய வேறு சொற்பொழிவுகளை படித்தறியவில்லை,

அல்லது

(3) கொள்கை வேறுபாடு காரணமாக தோழர் நாயுடு அவர்களைப்பற்றி காரணமின்றி வீணான தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறார், என்ற முடிவுக்குத் தான் என்னால் வரமுடிகிறது. ஜி. டி. நாயுடு ஒரு 'முதலாளி' என்பது மணியின் கண்ணை உறுத்தும் முதற்குற்றச்சாட்டு. 'மணி' தினே தினே தவம் செய்யும் காங்கிரசேமுதலாளிகள் கையில் இருக்கிறதே! சில நாட்களுக்கு முன்னர், காங்கிரஸ் கட்சியுடன் ஊடல் விளையாட்டு விளையாடிவரும் தோழர் ஜயப்பிரகாஷ் நாராயணர், தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் போது, பிறவி முதலாளிகளான பார்ப்பனர்களுடையவும், சந்தர்ப்ப முதலாளிகளான விஜயநகரம் ராஜாவுடையவும் வாலைடன்றோ பிடித்து, சோஷ்யலி பிரகாரம் செய்து வந்தார். எனவே முதலாளி என்ற காரணத்திற்காக ஒருதனிப்பட்ட நபரை இன்று நாடு இருக்கும் நிலையில், குற்றவாளியாக்கி விடுவது அவ்வளவு உசிதமானதல்ல. அந்தக் குறிப்பிட்ட முதலாளி தன்னலமேம்பாடு கருதி உழைப்பவரா. அல்லது பொதுஜன நன்மை கருதி உழைப்பவரா? பிற்போக்காளரா அல்லது முற்போக்காளரா என்பதனையே கவனிக்கவேண்டும்.

1947—ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1—ஆம் நாளன்று மந்திரி கனம் பி. கோபால ரெட்டி அவர்களை வரவேற்றுப் பேசியகாலை தோழர் நாயுடு குறிப்பிட்டதாவது:—

''........கள்ளமார்க்கட்காரர்கள் ஏமாற்றுபவர்கள், பதுக்குவோர் முதலியவர்களுக்கு, பத்து அல்லது இருபது வருட கடுங்காவலும், தனிப்பட்ட சொத்தோடு குடும்ப சொத்து முழுவதும் பறிமுதல் செய்யப்படும் என்றும் தண்டனை விதிக்கத்தக்க பொது நலப் பாதுகாப்புசட்டம் கொண்டு வந்தால் (பழைய சட்டங்களையும். விதிகளையும் நீக்கி) ஏமாற்றுதல், கள்ளமார்க்கட், பதுக்குதல் ஆகியவை மறைந்து விடும்''

''கல்வியில்லாதவர்களின் எண்ணிக்கை மற்ற நாடுகளை விட நம் நாட்டில் அதிகமாய் இருந்தாலும் பொதுவாக பல நாட்டாரை விட நம்மவர்கள் புத்திசாலிகள். கடுமையான விதிகளுக்கு ஏற்றவாறு பழக்கப்பட்டிருப்பதால் இன்றைய வேதாந்த விதிகளும், சட்டங்களும் அவர்களுக்குப் பிரயோசன மில்லை. எந்தவொரு சர்க்காரும் அதிகாரத்திற்கு வருமுன் இந்த அடிப்படையான விதியைத்தயாரித்து அமுல் நடத்தவேண்டும். அப்படிச் செய்த பின்தான் ஒரு சர்க்கார் ஒரு இனத்தை ஆளமுடியும், எல்லாவற்றையும் நாட்டின் செல்வமாக ஆக்கஉதவும்; தேசியமயமாகவும் ஆக்க இயலும்''

''இதைச் செய்யுமுன் எதையும் தேசிய மயமாக்க கனவிலும் கருதலாகாது, அதற்கு மாறாக எதையாவது தேசிய மயமாக்க முயன்றால் அது ஏமாற்றுதலைத் தேசிய மயமாக்குவதாகவே அர்த்தமேற்படும் தேசிய மயமாக்குவதைக் குறித்துப்பிரசுர நகல்ஒன்று 'புரூப்' ரூபமாகத் தயாரிக்கப்பட்டு வந்தது. அதற்குள் தேசிய மயமாக்குங் கொள்கையை சர்க்கார் மாற்றிக் கொண்டு விட்டார்களாதலால், அது பிரசுர ரூபத்தில் அச்சாகி வெளிவராமல் நின்று விட்டது. அடிப்படையில் அஸ்திவாரத்தைப் பலப்படுத்து முன் தேசிய மயமாக்க மறுபடியும் சர்க்கார் முன்வருங் காலத்தில் அந்தப் பிரசுரமும் ஒருக்கால் வெளிவரலாம்.''

மேற்படி சொற்பொழிவிலிருந்து நாட்டிலே பல துறைகளையும் தேசிய மயமாக்க வேண்டுமென்ற விருப்பமுடையவரா தோழர் நாயுடு அல்லது உள்ளபடியே லஞ்ச ஊழல்களற்ற முறையில் தேசிய மயமாக்குவதில் விரோத

“தமிழ் மணி”யின் ஆணவம்!

மனப்பான்மை காட்டக் கூடியவரா தோழர் நாயுடு என்ற பிரச்னையை வாசகர்களின் தீர்ப்புக்கே விட்டு விடுகிறேன்.

தவிர, சுமார் 11 ஆண்டுகளுக்கு முன்னர் கோவைஜில்லாவிலுள்ள எல்லா நகர சபைகளுக்கும் தோழர் நாயுடு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். அவருடைய தொழில் ஸ்தாபனத்தை, பொதுமக்களுக்குப் பயன்படும் முறையில் ஏற்று நடத்துமாறு கேட்டிருந்தார் தமக்குள்ளத்தகைய இலாபமும்வேண்டாமென திட்டமாகக் குறிப்பிட்டிருந்தார், அவர்கள் ஒருவராவது பொதுமக்களுக்குப் பயன்படக் கூடிய தொழில் ஸ்தாபனத்தை ஏற்று நடத்த முன்வரவில்லை. உண்மை விஷயம் இதுவாயிருக்க, அறிஞர் நாயுடு அவர்களை சுயநலப்புலி என்றும் மலும் “முதலாளிகள் கோடிக்கணக்கில் வருமானம் வாய்க்ககூடிய முறையில்சென்னை சர்க்காரோ அல்லது மத்திய சர்க்காரோ எந்த திட்டம் உருவாக்கினாலும் அதை முத்தமிட்டு வரவேற்க ஜி.டி.நாயுடு சற்றும்தயங்க மாட்டார் என்றும் அதே சமயத்தில் அவர் போன்றாரின் ஏகபோகத் தொழிலுக்கும், வருமானத்துக்கும் களங்கமுண்டாகும் வகையில் ஏழைகளின் நலனுக்காக, பாமரமக்களின் நன்மைக்காக எந்தத் திட்டத்தை உருவாக்கினாலும் அதை எதிர்த்துப் பேசுவதிலும் சற்றும்தயங்கமாட்டார்கள்” என்றும் குறிப்பிட்டிருக்கிறது, அக்காங்கிரஸ் தப்பட்டை!

1946–ஆம் ஆண்டில் இரண்டரை (2½) லட்ச ரூபா யுத்தக் கடன் பத்திரங்களை ஏழைகளுக்கும், பாமர மக்களுக்கும் தாராளமாக பிரதிப்பயன் கருதாது விநியோகம் செய்தார் அறிஞர் நாயுடு. அந்த செய்கையை யறிந்திருந்தால் ‘மணி’ ஆசிரியர் அவரை ‘ஏழைகளின் நலனைக் கவனியாத சுய நலப்புலி’ என்றழைக்கத் துணிந்திருப்பாரா? அந்த விஷயம் அறிந்திருந்தும் அவ்வாறு அவரைத் தூஷணை செய்திருந்தால் அது தேசீய பத்திரிகைகளுக்கே உரித்தான வடிகட்டிய அயோக்கியத்தனமாகும், அது மட்டுமல்லாமல் தாம் நடத்திவந்த பஸ்போக்கு வரத்துக் கம்பனியை அதிலுள்ள ஊழியர்களே நடத்திக்கொள்ளும்படி விட்டுக்கொடுத்து விட்ட தாராள மனப்பான்மை படைத்த தோழர் நாயுடு அவர்கள் ‘திருகுதாளம்’ புரிகிறார் என்று ‘தமிழ்மணி’ அலறியிருப்பது விந்தையேயாகும். பஸ் போக்கு வரத்துக் கம்பனி நடத்தும் விஷயமாய், சில காரியங்களைப் பொறுத்தமட்டில் யோசனை கூறுவதற்காக ‘ஆலோசனையாளர்’ என்பதாக மட்டும் அவர் இன்றைக்கும் இருந்து வருகிறார். கடந்த 28 ஆண்டுகளாக நடந்து வரும் இந்தப் பஸ்போக்கு வரத்து ஸ்தாபனத்தில் அதன் ஆரம்பகாலம் முதற்கொண்டு இது வரை ஒருமுறைகூட வேலை நிறுத்தம் ஏற்பட்டதில்லை. கம்பனியை நடத்தும் நூற்றுக் கணக்கான தொழிலாளருக்குள் கூட்டுறவும், நம்பிக்கையும் வளர்ந்துள்ள காரணத்தால் அவர்கள் ஒவ்வொருவரும் வாழ்க்கைத் தரத்தில் நல்ல அந்தஸ்துடன் இருந்து வருகின்றனர். அவர்களில் நூற்றுக்கு 90 பேர்களுக்கு எவ்விதமான கடனோ, இதர கஷ்டங்களோ இல்லவேயில்லை. அவ்வளவோடல்லாமல் அவர்களில் அநேகர் நிலபுலன் அல்லது ரொக்கம் அல்லது நகை என்ற ரூபத்தில் சொத்து சுகம் உடையவர்களாகவும் ஆகி இருக்கிறார்கள். இவற்றிற்கு மேலாக, தொழில் அலுவல்களை அக்கரையோடு செய்வதிலும், சகவாச நடவடிக்கைகளிலும் மிகவும் ஒழுக்க சீலத்துடன் இருந்துவருகின்றனர். உண்மையிலேயே இந்தஸ்தாபனம் சுத்தமான சோஷியலிசக் கொள்கையை அனுஷ்டானத்தில் கடைப்பிடித்து நடக்கின்றது.

‘திவான் பகதூர்’ ‘சர்’ பட்டங்களை ஆங்கில அரசாங்கம் அவருக்கு அளித்துக் கவுரவிக்க முன் வந்தபோது, வேண்டாமென்று மறுத்த தியாகி தோழர் நாயுடு.

“காங்கிரஸ் சர்க்காரைத் தூற்றுவதோ, அல்லது இந்திய யூனியன் சர்க்காரின் திட்டங்களைப் பற்றிக் குறை கூறுவதோ முற்றிலும் தவறு” என்று நாயுடு அவர்களுக்கு இறுதியாக உபதேசம் செய்கிறது காங்கிரஸ் தப்பட்டை.

நாட்டு மக்களுக்காக சர்க்காரே யொழிய, சர்க்காருக்காக மக்களல்ல என்ற உண்மையை முதலாவதாக அறிந்திருக்கவேண்டியது, பத்திரிகை நடத்துவோரின் கடமையாகும். சர்க்காரை நடத்துபவர் காங்கிரசார் என்பதற்காக அரசாட்சி முறையில் தப்பிதங்கள் காணப்பட்டால் அவ்வப்போது கண்டிக்காமலிருப்பது பொது ஜன நன்மையில் அக்கரை கொண்டோருக்கு முறையல்ல என்பது, இரண்டாவது விஷயம். அடுத்தபடியாக, மோட்டார் தொழிலையோ அல்லது பிற தொழிலையோ தேசியமயமாக்க வேண்டுமென்பதற்குச் சிஞ்சிற்றேனும் குரோத மனப்பான்மையோ, விரோத எண்ணமோ கொண்டவரல்ல தோழர் நாயுடு. இதனையும் ‘தமிழ்மணி’ அறிந்து

தொடர்ச்சி 10-ம்பக்கம் பார்க்க

முக்கிய அறிவிப்பு

"திராவிடன் அலுவலகம்'' நாளது ஜூன் மாதம் 7-ந் தேதியிலிருந்து 18 பெருமாள் முதலி தெரு மிண்ட்பில்டிங், சென்னை—1. என்ற முகவரிக்கு மாற்றப்படுவதால், நேயர்கள் இனி எல்லா கடிதப் போக்கு வரத்தும் புதிய முகவரிக்கே எழுதுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

தவிர, மணியார்டர், செக், ரிஜிஸ்டர் லெட்டர் முதலின என். வி. நடராசன் (ஆசிரியர் & உரிமையாளர்) பெயருக்கே அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

அடுத்த வாரம் முதல் 'திராவிடன்' பிரதி சனிக்கிழமை தோறும் வெளிவரும்,

அலுவலாளர்:— **"திராவிடன்''**

★ திராவிடன் ★

சென்னை 6—6—'48 ஞாயிற்றுக்கிழமை

1938-40 நினைவிலிருக்கிறதா ?

வடநாட்டு மொழி (லம்பாடிப் பாடை) இந்தியை, அரசியலார் மீண்டும் நம் நாட்டில் திணிக்கப் போகின்றனர் என்று சலசலப்பும், மிரட்டலும் காட்டப்பட்டு வந்தன.

அரசியலாருக்குஇந்த வக்கிர புத்தி மீண்டும் உண்டாகாதென்றே நாம் மட்டும் உறுதியாக எண்ணியிருந்தோம். என்றாலும், திராவிட நாட்டிலே தமிழகத்தில் மட்டும் கட்டாய இந்திக்குக் "கல்தா'' கொடுத்துவிட்டு தெலுங்கு, கன்னட, மலையாள பகுதிகளில், கட்டாய பாடமாகப் புகுத்தியுள்ளனர். இவ்விடங்களில் மட்டும் ஆட்சியாளரின் வரட்டு ஜம்பம் விடாப்பிடியாயிருப்பதுவேனோ அறியோம். ஆனால் இதற்குங்கூட சில பார்ப்பனப் பத்திரிகைகள் முணுமுணுக்கின்றன.

தமிழகத்திலே கட்டாய இந்தியை மீண்டும் புகுத்த அவ்வளவு கபோதிகளாகவா இருப்பார்கள் ஆட்சியாளர்!

அந்த 1938-40 வரலாறும், ஆச்சாரியார் பட்ட அவஸ்தையும், திராவிடரின் எழுச்சியையும் எவர்தான் மறக்க முடியும். நமது ஆந்திர கர்னாடக கேரளத் தோழர்கள்கூட அதை மீண்டும் நினைவு கொள்வார்களானல் நலமென்றே ஆசைப்படுகிறோம்.

இந்தி புகுத்திய நாள் 25—2—38

போர் துவக்கம் 4—6—38.

வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி, 'விடுதலை' முன்னாள் ஆசிரியர் பண்டித முத்துசாமியார் கைதியானது 7—10—38.

தாய்மார்கள் சிறைக்கோட்டம் புகுந்த புரட்சி நாள் 14-11-38.

திராவிடத் தந்தை பெரியார் சிறை புகுந்தது 26—11—38.

திராவிடத்தின் தன்மான வீரர் நடராசன் பார்ப்பனீய ஆட்சியில் மாண்ட நாள் 15—1—39.

பெரியார் அவர்களை (கடும் வெய்யிலில்) பெல்லாரி சிறைக்கு மாற்றப்பட்ட தேதி 16-[illegible]-39.

பெரியார் மோட்டரை ஆச்சாரியர் ஆட்சி பறிமுதல் செய்த நாள் 27—2—39.

மற்றொரு மதிப்பிற்குரிய வீரர் தாலமுத்துவும் அப்பார்ப்பனீய ஆட்சிக்குப் பலியான நாள் 13—3—39

திராவிடத் தலைவர் பெரியார் விடுதலையான தேதி 22—5—39

முதன் முதலாக இந்தி எதிர்ப்புத் தொண்டர்களை விடுதலை செய்யப்பட்ட நாள் 7—6—39.

இரண்டாம் முறை விடுதலை செய்யப்பட்ட தேதி 15-11-39.

காஞ்சிமா நகரில் காரியக் கமிட்டி கூடி இறுதி எச்சரிக்கை விடுத்த நாள் 31—12—39.

கட்டாய இந்தி (லம்பாடிப் பாடை) மண்ணைக் கவ்விய (ரத்துசெய்யப் பட்ட) தேதி 21—2—40.

ஆக, இந்திப்போரில் சிறை சென்ற தோழர்கள் 1164, தாய்மார்கள் 73, குழந்தைகள் 32, ஆக. 1269 வீரர்கள்!

ஆட்சியாளருக்கு நாட்டின் அமைதியைக் காத்து மக்களின்

இன்றைய இன்றியமையா குறைகளைத் தீர்க்கவேண்டுமென்ற எண்ணமிருப்பதாகக் கூறிக்கொள்ளும்போது அதற்கானவன செய்வதை விடுத்து அறிவுடமையற்ற, அவசியமில்லாத, வெற்றியடையவும் முடியாத காரியத்தில் தலையிட்டு, முடிவில், மூக்கறுபடுவார்களா?

நூற்றுக்கு 12 விதம் ஆண்களும் ¼ விதம் பெண்கள் மட்டுமே, தங்களின் தாய் மொழியில், படிக்க பேச யோக்கியதையுடைய இந்நாட்டில் மற்ற அந்நிய மொழியை ஆட்சியின் பேரால் கட்டாயமாகப் புகுத்துவது துவக்கத்தில் வெற்றியளிக்கலாம். ஆனால் இறுதியில் என்ன ஆகும் என்பதை 1938-40 வரலாற்றிலிருந்து உணர்ந்த அரசியலார், மீண்டும், கட்டாயத்தை கனவிலும் கருத முடியுமா? அன்று அறுந்தது தாலியொன்று ஐய்யோ என்று அலறினாள் ஒரு மங்கை. துடித்தனர் தாலமுத்துவின் தோழர்கள். திராவிடமே துக்கத்திலாழ்ந்தது.

அதற்கு முன்னரே (15-1-39) நலிந்து மெலிந்த நரைத்த தனது தந்தையைத் தவிக்கவிட்டு வீரர் நடராசனும் மாண்டார்.

ஆக இவ்விரு மரணங்களும் திராவிடத்தின் சரித்திரத்தில் இரத்தக் குறியுடன் எழுதப்பட்டுள்ள செய்தியாகும். இதனையும் நமது மதிப்பிற்குரிய அரசியலார் மறந்திருக்க முடியாதல்லவா?

அன்று துரோகிகளும், தொடை நடுங்கிகளும் எதிரியின் படையில் இருந்துகொண்டு எல்லாம், என்றும், சதம்என்று இறுமாந்து இன்னல் பல புரிந்தனர். என்றாலுங்கூட அந்த லம்பாடி பாடையை திராவிடத்தில் கட்டாயமாகப் புகுத்தும் ஆணவ வேலையில் ஆச்சாரியார் ஆட்சி அலாதி தோல்வியடைந்ததேயன்றி தமிழகத்தின் மொழிப்பற்றை அசைக்கவும் முடியவில்லையல்லவா?

வங்காளத்திலே இந்தி என்னும் லம்பாடி பாடைக்குக் கல்தா கொடுத்து விட்டபோது இந்நாட்டு மக்கள் மட்டும் ஏமாந்த சோணகிரிகளா என்ன?

அன்று ஆச்சாரியார் திராவிடரின் மொழிபபற்றை அழிக்கயெண்ணி சில விபீஷணர்களையும் சேர்த்துக்கொண்டு நாடெல்லாம் பவனி வந்தார். 'கையில் கிடைத்ததைக்கொண்டு அடித்து அடக்குவேன்' என்று மிரட்டல் பதிகம் பாடினார். அவர் கண்டது என்ன? காலணி, துடைப்பம், கட்டை, மண், மட்டை, கேள்வி, குழப்பமும், சிந்தை கலங்காது தாய்மார்கள், குழந்தைகள், வயோதிகர், வாலிபர் அதுவும் வகுப்பு வேற்றுமையையும் மறந்து, சிறைக், கோட்டம் புகுந்த எழுச்சியையுந்தான்.

இது கண்டு அன்பர் ஆச்சாரியார், அடக்குமுறைக்கு அடிமையாகும் நிலைபெற்றாரேயன்றி திராவிடத்தின் மொழிப்பற்றை, உணர்ச்சியை அடக்கிவிடும் ஆற்றல் பெற்றாரில்லை, ஏன்; அவர் அன்று செய்தது அடாதகாரியம், எனவே அடாது செய்தால் படாதுபடுவர் என்ற முதுமொழிக்கு இலக்கானார்.

பத்தாண்டுகளுக்குமுன் நடைபெற்ற இவ்வரலாற்றினை ஆட்சி பீடந்தாங்கிகள் மனதில் வைத்து அதற்கேற்ப நடக்காமலிருக்க முடியுமா? என்னதான் பட்டேலிஸம் பக்கபலமிருந்தாலும்.

இம்முறை கட்டாய இந்தியை எதிர்த்து ஆவன செய்யப்படவேண்டிய அவசியத்தை ஆட்சியாளர் உண்டாக்கியிருந்தால், அந்த முன்னணியிலே, அதுவும் முதல் வரிசையிலே; தலைநிமிர்ந்து தன்மானத்துடன் பணிபுரியப் போகிறவர்கள் நமது பகுத்தறிவியக்கத்தாய் தொழிலாளர் தலைவர் திரு.வி. கலியாணசுந்தரனாரும், மதிப்பிற்குறிய நாவலர் எஸ்.என். பரதியார், பேரறிஞர் சேதுப்பிள்ளைபோன்றோரும் காங்கிரஸ் கூடாரத்திலே முற்போக்கு சக்தி மனப்பான்மை கொண்டுள்ள தோழர்களும். சமயம் நேரிட்டால், கல்வி அமைச்சர் கனம். அவினாசியார் போன்றோருந்தான் என்பதை ஆரிய ஆட்சி அறியாததா?

இவர்களுக்குப் பக்கபலபட்டாளமாக திராவிடர்கழகம் இருந்து வருவதையும், பகுத்தறிவியக்கத்தந்தை இந்நாட்டுச் சிறைப்பறவையாகியும் தள்ளாத வயதில் மொழிக்காகச் சிறைச் சென்று நாட்டுக்கும் மக்களுக்கும் தன்மானத்தை அள்ளியள்ளி யூட்டியுள்ளார், அவரின் மிச்ச வேலையை பகுத்தறிவிக்கத்தாய் செய்ய வேண்டியதன்றோ கடமையாகும்?

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைக்குஞ் சிறைச்சாலை" என்று நமது தாய்மார்கள் அன்று வீதிகளிலே வலம்வந்து வாகை சூடியதைக்கண்ட பிறகும் "பெண்ணின் பெருமையை" எழுதிய பெருந்தகை இனிபின் வாங்குவார் என்று எண்ணுதற்குஇடமுண்டா? எனவேதான் கட்டாய இந்தியை எந்த ரூபத்தில் புகுத்தினாலும், அந்த எண்ணம் மண்ணைக்கவ்வியே தீரும் என்பதை உணர்ந்து ஆட்சியாளர் தங்களது போக்கை புத்திசாலித்தனமாகத் திருத்திக்கொண்டார்கள் என்றே கூறுவோம்.

அன்று ஒரே ஒரு "ராமசாமி"யைப்பார்த்து அலறினார் ஆச்சாரியார். இன்றோ செகரிடிரியேட்டிலும் ராமசாமி, சர்க்கார் மாளிகையிலும் ராமசாமி; காங்கிரஸ் கூடாரத்திலே, காமராஜனார் மனதுக்குள்ளே எண்ணற்ற ராமசாமி

கள்; ஓமந்தூரார் செயலிலே ராமசாமி, மாணவர் உள்ளத்திலே, பாட்டாளி எண்ணத்திலே ராமசாமிகள், திராவிடமே 'ராமசாமி'யாக வீறுகொண்டெழுந்துவரும் இந்நாளில், ஆட்சிபீடத்திலுள்ள அன்பர்கள் இந்தியை கட்டாயமாகத் திணிக்கும் கோமாளிகளாக விளங்கமுடியுமா?

"தமிழ் இசை" மன்றம் அமைத்து சிந்து பாடும் 'சீமான்'கள் கூட அரசியலாருக்கு ஒத்து ஊதியிருக்க முடியாதே.

அன்று, காங்கிரஸ் நடத்திய சத்தியாக்ரகப் போர், அந்நிய நாட்டுத் துணிக்கடைகளில் அமளி தொண்டர்கள் மறியல் செய்து மண்டையை உடைத்துக்கொண்ட எழுச்சியைப் பார்த்துங்கூட தோழர் சத்தியமூர்த்தி வெளிவந்தாரில்லை, தொண்டர்கள் கூடினர் சென்னை சவுந்தாய மகாலிலே; நன்றி கெட்டதனமாய் நடந்து கொள்ளும் இந்த சத்தியமூர்த்திபோன்றவர்களுப் புத்தி புகட்டவேண்டும் என்ற முழக்கம் செய்தனர்.

வீரத்தாய்மார்கள் வெளியே வந்து சேவை செய்கின்றனர், தோழர்களும் அவ்விதமே, ஆனால் சத்தியமூர்த்தியாரே நீர் வீரஞ் செறிந்த ஆணுமல்ல பெண்ணுமல்ல, அலிதான் என்று கருதுகிறோம். இதோ உமக்கு அதற்கான சீதனம். மஞ்சள், குங்குமம், வளையல் மெட்டுமுதலியன ஆண் ரூபத்தில் பெண் வேடத்தில் அறையிலேயே அமர்ந்திரும்" என்று இடித்துக்கூறும் மூகத்தான் அவைகளைப் பெட்டியிலே வைத்துப் பார்சல் செய்து சத்தியமூர்த்தி இல்லத்திற்கு அனுப்பப்பட்டது. அடுத்த இரண்டு நாட்கள் கழிந்தன. சத்தியமூர்த்தியாரும் சமர்த்தரானார் சவுளிக்கடைதனிலே நின்று சாடினார்; சீமைத்துணி வாங்காதீர் என்று.

நமது திராவிடத்தின் வேண்டுகோளையும் மதிக்காமல், ஆட்சியாளர் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்தி நம்மை வம்புக்கிழுத்து கசக்கியிருந்தால் "தமிழ் இசைக் கர்த்தாக்களென" கூறிக்கொள்ளும் பெரிய இடத்து மேதாவிகள் சும்மாவா யிருப்பார்கள்? அப்படியிருந்தால் சத்தியமூர்த்தி யாருக்குப் புகட்டிய புத்தியை திராவிட மக்கள் இந்தபிரகஸ்பதிகளுக்கும் புகட்டித்தானே தீருவர்

எனவேதான் திராவிட நாட்டிலே தமிழகத்தில் மட்டும் கட்டாய இந்தியைப் புகுத்த அரசியலார் துணிவு கொண்டார்களில்லை. ஆனால் திராவிடத்தில் மற்ற பகுதிகளிலும் அதாவது ஆந்திர கர்நாடக கேரளத்திலும் இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கப்படுவதை அரசியலார் உடனே ரத்து செய்ய வேண்டுகிறோம். 1638—40 ஆந்திரத்திலும் பரவி விட்டபின் பணிவதை விட, துவக்கத்திலேயே விவேக புத்தியுடன் நடப்பதுதான் பொறுப்புள்ள ஆட்சியாளர் என்று கூறிக்கொள்வதற்காவது ஏற்றதாயிருக்கும். முட்டிய பின்குனிதல் நல்லதல்ல.

சர்வதேசத் தொழிலாளர் மாநாடு

இம்மாதம் சான்பிரான்ஸிஸ் கோவில் நடைபெறப் போகும் சர்வதேச தொழிலாளர் மாநாட்டிற்கு இந்திய சர்க்கார் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முனைந்துள்ள மானங்கெட்ட முறையை இதுவரை எந்த சர்க்காரும் செய்திருக்க வில்லை யென்றே கூறலாம்.

தேசிய தொழிற்சங்க காங்கிரசுக்குத்தான் நாட்டில் அதிக செல்வாக்கிருக்கிற தென்றும், பெரும்பான்மையான தொழிலாளர்கள் அதிலே சேர்ந்துள்ளனரென்றும் எனவே அச்சங்கத்தின் மூலமாக தொழிலாளர் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதென்றும் அரசியலார் அறிக்கை கூறுகிறது.

இச்சங்கம் எதற்காகஎப்போது ஏற்பட்ட தென்பதை இந்திய தொழிலாளர் மட்டுமின்றி சர்வதேசத் தொழிலாளர் இயக்கமும் அறிந்ததேயாகும்.

தொழிலாளரின் உணர்ச்சியையும் ஒற்றுமையையும் நாசப்படுத்த தங்களது கங்காணிகளைக்கொண்டு சமீபத்தில் தோற்று விக்கப்பட்டதே, தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் என்பது.

இதுவரை பல சர்வதேச தொழிலாளர் மாநாடுகளில் கலந்துகொண்டு பணியாற்றிய சங்கம் வேறொன்றிருக்க, அதற்குப் போட்டியாக அரசியலாரே ஆட்களைப் பிடித்து இவ்வித முறை தவறிய காரியத்திலிறக்குவது நேர்மையானதல்ல. ஆண்மையிருப்பின் ஜனநாயக முறையில் அச்சங்கத்தில் ஆதிக்கம் பெறுவது தான் அறிவுடமையாகும்.

இவ்வித வடிகட்டிய பிற்போக்கான செய்கையை நீதிக்கட்சியினர் கூட தங்களது ஆட்சி காலத்தில் கனவிலும் கருதியிருக்க மாட்டார்கள் என்பதை. சென்றகால தொழில் இயக்கச் சரித்திரமே கூறும்.

ஆக, இன்றைய ஆட்சி பாசிஸ வெறி கோலத்தில் முன்னேறுகிறதே யன்றி அறிவுடமையிலோ, நேர்மையிலோ, ஜனநாயகத்திலோ ஒரு சிறிதும் செல்லவில்லை.

எனினும், தொழிலாளரின் சக்தியை அதிகார பலங்கொண்டு மேலும் மேலும் சீர்குலையச்செய்து வருவதற்கு இன்றைக்கில்லா விட்டாலும் எதிர் காலத்தில் அதற்கான பலனை அடைந்தேதீருவர். "ஏழைகள் அழுத கண்ணீர் கூரிய வாளை யொக்கும்" என்பதை பாசிஸ வெறி கொண்ட பட்டேலிஸ ஆட்சியின் புத்தியில் ஏறச் செய்யும் நாள் அதிக தொலைவில்லை என்பதை அறிவார்களாக

திறந்த மடல்

...கூத்தரசன்...

டாக்டர். டேனியல் மலான்

தென் ஆப்ரிக்கா.

ஜெனரல் ஸ்மட்ஸைத் தோற்கடித்த தீரரே! உமது வெற்றியினைக் கண்டு எவரும் மகிழ்ச்சியடைவதற்கில்லை.

நிறத்திமிரின்சின்னம் ஸ்மட்ஸ் என்று நையாண்டி செய்துவந்த வாய் வீச்சு வீரர்களுக்கெல்லாம், தங்களின் வெற்றி வாயடைப்பு செய்துவிட்டது.

இனி தென்னாப்ரிக்காவில்நிறத்திமிர் மட்டுமல்ல அத்துடன் எல்லாத் திமிரும் சேர்ந்து 'ஒரு கை' பார்த்துவிட்டே தீருவீர் என்பது தங்களின்வெற்றிக்கான கொள்கையே எடுத்துக் காட்டுகிறது.

தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர் உரிமைகளை ஒரு வட்டமேஜை மாநாட்டின்முன் விட்டு தீர்த்துக் கொள்ளலாம் என்று கூறியதற்காகவே இன்று ஸ்மட்ஸ் தோற்கடிக்கப்பட்டுள்ளார். தாங்களோ இந்தியர்களைத் தயவு தாட்சண்யமின்றி கழுத்தைப்பிடித்துத் தள்ளவேண்டுமென்ற அளவு வெறி பிடித்தவர்.

தங்களது தலைமையில் தென்னாப்பிரிக்காவின் எதிர்கால ஆட்சி துவக்கப்படப் போகிறது! எனினும் எத்தனை நாட்களுக்கு உமது பதவிப்பீடம் ஆட்டங் கொடுக்காதிருக்குமோ யானறியேன்.

ஒன்று மட்டும் நிச்சயம், நிறத்திமிரும், ஜாதித் திமிரும், ஒன்றுக்கொன்று இளைத்ததல்ல, எங்கள் நாட்டில்கூட ஜாதித் திமிர் பிடித்த கும்பலின் வெறி உச்சநிலைக்குச் சென்றிருக்கிறது விரைவில் அது கீழே சாய்ந்து, அழிந்தே தீரும். அதைப்போல உங்களது நிறத்திமிரும் அழிந்துவிடும் என்பது மட்டும் உறுதி. அதை மனதில் வைத்து ஆணவத்தை விட்டு ஆட்சிபுரிந்தால் தங்களது ஆட்சிகால அற்பாயுசு சற்று நீடிக்கக் கூடும்.

"கூத்தரசன்"

ஃ ஃ

கனம் அவினாசிலிங்கம் அவர்கள்

சென்னை.

கல்வி அமைச்சரே, வணக்கம் இம்மாதம் 29-ந் தேதி நடைபெற்ற சினிமா தணிக்கை போர்டு கூட்டத்தில் தாங்கள் பேசுகையில் பட முதலாளிகள் மக்களுக்கு அறிவூட்டும் படங்களையே பிடித்துக் காட்டுதல் வேண்டுமென்றும், ஆபாசமான சம்பவங்களைப் படமெடுத்து காட்டுவதை விட்டுவிடவேண்டுமென்றும் எச்சரித்திருக்கிறீர்கள்.

இதே போன்றுதான் இதற்கு முன்பிருந்த மந்திரிகளும் சம்பிரதாயப்பேச்சு பேசுவது வழக்கம். ஆனால் பட முதலாளிகளின் பணப்பெருக்கத்திற்கான பழைய பழக்கவழக்கம் மட்டும் குறைந்தபாடில்லை

காயிதத்தில் சக்கரை என்று எழுதி அதை சுவை பார்த்தாலும் ஒருபேர்வழி, அதைப்போலயிருக்கிறது உங்களது போக்கும். 'வாய்ச் சொல்லில் வீரடி' என்பதை விடுத்து தயவுசெய்து காரியத்தில் இறங்குங்கள், இன்று சென்னை நகரில் காட்டப்படும் படங்களில் ஆபாசமானதுமான மடமையை வளர்ப்பதுமான படங்களுக்குத் தடை உத்திரவு போடுங்கள், அப்போதுதான்சில பட முதலாளிகளுக்காவது அறிவுக் கண் திறக்கும். ஆனால் இம்மாதிரி காரியங்களுக்கு துணிவு ஏன் கொள்ளப்போகிறீர். தொழிலாளி கூலி உயர்வு கேட்டால் தடையுத்திரவு அவசரச் சட்டம் எல்லாம் ஐந்து நிமிடத்தில் முளைத்துவிடும் இந்த லட்சணத்தில் பகட்டான பேச்சில் மட்டும் குறைவில்லை.

"கூத்தரசன்"

ஃ ஃ

சர். சி. பி. ராமசாமி அய்யர்

உதகமண்டலம்.

முன்னாள் திருவாங்கூர் திவானே வணக்கம், தங்களிடம், அட்டைபோல ஒட்டிக்கொண்டிருந்த திவான் பதவியை கீழே வைத்துவிட்டு போமய்யா என்று கூறும் முறையில் உங்களை அங்கிருந்து ஓட்டி விட்டார்கள்.

தாங்களும் இந்த நன்றிகெட்ட நாட்டிலே நடமாடுவதைவிட தலைமறைவாய் சுற்றி வரலாம் என்ற விரதம் பூண்டு அமெரிக்கா யாத்திரை செய்து புண்ணிய புருஷராகவும் திரும்பி வந்தீர்கள்.

இவ்விதம் திரும்பி வந்த தங்களுக்கு திருஷ்டி பரிகாரம் செய்யவேண்டுமல்லவா? அதை முன்னிட்டுதான் போலும், காஸ்மாபாலிடன் கிளப்பில் தங்களது படத்தை இந்திய சர்க்கார் மந்திரி சியாமா பிரசாத் முகர்ஜி திறந்து வைத்து ஒரு போடுபோட்டார். சர். சி. பி. யிடத்தில் நிதி மந்திரி சண்முகம் அவர்கள் பாடம் கற்றுக் கொண்டு நிர்வாகம் நடத்தினால் நல்லதென்று. எனக்குக் கூட அவர் அம்மாதிரி கூறியதின் ரகசியமும் அவசியமும் குழப்பமாகவே யிருந்தது.

அதன் எதிரொலி இப்போதுதான் தெரியவருகிறது. தங்

களுக்கு இந்திய சர்க்காரில் ஒரு மந்திரிபதவி சான்ஸ் அடித்துள்ளதாம். அநேகமாக பட்டேல் துரையிடமிருந்து ஏதாவது ஒரு இலாகாவைத் தங்களுக்குக் கொடுக்கப் போவதாகவும் கூறப்படுகிறது.

சில நாட்களுக்குமுன் இது பற்றி பண்டிதநேருவை ஒரு அன்பர் கேள்வி கேட்டபொழுது அவர் சாமர்த்தியமாக 'பட்டேல் எங்கே போவார்' என்று பதில் கூறியதாக ஒரு வதந்தி உலாவிற்று. ஆனால் வர வர இது விஷயம் கள்ளக் கரு போன்று கனத்து வருகிறதாம்.

அடக்குமுறை வீரரே! ஒருக்கால் உங்களுக்கு சான்ஸ் அடித்தால் போலீஸ் இலாக்காவை எடுத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் ஆகஸ்டு சுயராஜ்யத்தின் அவலட்சணத்திற்கு சிகரம் வைத்தது போன்ற பெருமை உண்டாகும்.

தாங்களும் அப்பதவியில்அமர்ந்துக்கொண்டே காங்கிரஸ்காரர்களுக்கு "புத்தி" சொல்லலாம். அதையும் பொறுத்துக்கொண்டு இது "சுயராஜ்ப அடக்குமுறை" அப்படித்தானேயிருக்கும் என்று தத்துவார்த்தம் பேசும் அப்பாவிகள்தானே யிருக்கின்றனர். போதாக்குறைக்கு ஆச்சாரியார் கவர்னர் ஜெனரல்! உங்கள்பாடு யோகந்தான்.

எப்படியாவது தோழா ஆர். கே. சண்முகத்தையும் அங்கிருந்து வெளியேற்றிவிட்டு, அல்லாடி அய்யருக்கும்ஒரு 'சான்ஸ்' கொடுத்து விடுங்கள். பாருங்களேன் பிறகு! சாட்சாத் மேலிடம் சர்வம் பார்ப்பனுய நமஹ என்றுகிவிடும். பிறகு மாதம் மும்மாரிதான்!

"கூத்தரசன்"

5-ப் பக்க தொடர்ச்சி

கொளல் அறிவின்பாற்பட்ட செய்கையாகும்.

மாகாண சர்க்காருக்கு நிறைப அதிகாரங்கள் கொடுக்க மறுக்கும் மத்திய சர்க்கார், நேரு சர்க்காராக இருந்தாலென்ன, காங்கிரஸ் சர்க்காராக இ நந்தாலென்ன, அல்லது 'ஆண்டவனே' நடத்தும் சர்க்காராக இருந்தாலென்ன. அந்த சர்க்கார் 'ஆறறிவு படைத்த திராவிட மாந்தருக்கு விரோத சர்க்காரே யாகும். மத்திய சர்க்காரின் பிணைப்பிலிருக்கும்வரை ஊழல்கள் ஒழியா. ஊழல்கள் ஒழிந்தாலன்றி தேசியமயமாக்குதலோ அல்லது வேறு நற்காரியம் செய்தலோ இயலாத காரியம் இதை உணர சக்தியற்ற மணிகள் திராவிட அறிஞரைக் கண்டிக்க முற்படுவதில் வியப்பென்ன?

திராவிடநாடு அல்லது சென்னைமாகாணம் இந்திய யூனியனிலிருந்து பிரிந்து தனி அரசாக விளங்கினுற்றுன் நம் நாடு சுபிட்சமடையும் அதனையும் அறிந்து கொள்ளுமாக இத் தமிழ்மணி! கூலிக்கு மாரடிக்கும் பத்திரிகை என்ற நிலையிலிருந்து மாறி மக்கட்குப் பயன்படும் பத்திரிகையாக விளங்குமாக!!

வருந்துகிறோம்

சென்னை சுயமரியாதை சங்க நிர்வாக உறுப்பினர் தோழர். M. A. கிருஷ்ணசாமி அவர்களின் அருமைத் துணைவியார் தோழியர். தனலட்சுமி அம்மையார் அவர்கள் சென்ற மாதம் ஓர் ஆண் மகவை யீன்று பின்னர் நோய்வாய்ப்பட்டிருந்து, 2—6—48-ல் உயிர் நீத்தார்கள் என்பதை அறிந்து திடுக்கிட்டோம். துணைவியார் பிரிவால் வாடும் நண்பர். கிருஷ்ணசாமி அவர்களுக்கும் அவரது உறவினர்க்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(—ஆ—ர்)

குளிர்ந்த மணம் வீசும்

விகடன் பரிமள பாக்குத் தூள்

அநேகப் பொருட்காட்சிகளில் முதல் பரிசு பெற்றது— விற்பனையாளர்கள் தேவை. சம்பளம் ரூ. 25, 60, 100, எழுதுக.

மாணிக்க விலாஸ், மதராஸ் 11பீட்

ஆண்டு சந்தா

உள்நாடு	5—0—0
வெளிநாடு	6—8—0

புரசை இளைஞர் கழகத்தாரின் உன்னத சித்திரம்!

குற்றவாளி?

சமூக சீர்திருத்த நாடகம்
கதை வசனம் V.S. ராசன்

19—6—48 சனி மாலை 6-மணிக்கு

சென்னை. வி. பி. ஹாலில்

கட்டணம் ரூ. 3, 2, 1. அணு 10 (வரியுடன்)

சிறு நாடகம்

காதலின் முடிவு

இரே - சம்புநாதன்

காட்சி: 1

இடம்: கடற்கரை

நேரம்: மாலை

[கடற்காற்று உடலும், உள்ளமும், உவகை கொள்ள வீசுகிறது வெள்ளிய மணற்பரப்பில் இளங் காதலர்களும், குழந்தைகளும் மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருக்கின்றனர். மேகங்கள் கடலைத் தொடுவது போல காட்சி யளிப்பதைப் பார்த்து பானுவும் பத்மாவும் பேசிக் கொள்கின்றனர்.]

பானு:—பத்மா, அதோ. அந்த மேகம் கடலைத் தொடுவது எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தாயா?

பத்மா:—இயற்கையின் விளைவு ஒவ்வொன்றும் இன்பம் விளைவிப்பதாகவே இருக்கிறது,

பானு:—ஆம்,முற்றிலும் உண்மை. இயற்கையின் உதவியினால் தானே நான் கூட உன்னை அடைய முடிந்தது இல்லாவிட்டால் நீ யாரோ! நான் யாரோ. அன்று சினிமாக் கொட்டகையில் நடந்த கலாட்டாவில்........

பத்மா:— அப்பப்பா........ இப்பொழுது நினைத்தால் கூட உடல் சிலிர்க்கிறது. நீங்கள் இல்லா விட்டால் நான் வெளியேற முடியாது தான். இன்று இக் கடலின் அழகை ரசித்து கொண்டிருக்கவும் முடியாது.

பானு:— இன்று நம் திருமண விஷயமாக என் தந்தையைக் கலக்கலாம் என இருக்கின்றேன்

பத்மா:— நான் கூட தங்களிடம்சொல்ல வேண்டு மென்றிருந்தேன். ஏனென்றால் நாம் எவ்வளவு நாளைக்குத்தான் இப்படி இருக்க முடியும்?

பானு:— ஏன் இது இன்பமாக இல்லையா?

பத்மா:— இன்பந்தான்; இருந்தாலும் பிறர் பார்த்து ஏதாவது நினைத்துக் கொள்வார்களே என அஞ்சவும் வேண்டி இருக்கிறது. நாம் திருமணம் செய்து கொண்டு விட்டால் நம்மைச் சந்தேகத்தோடு பார்ப்பவர்களுக்குச் சரியான சவுக்கடி கொடுக்கலாமல்லவா?

பானு:—உண்மைதான் பத்மா! நிச்சயம் இன்று கேட்டு விடுகிறேன்.

பத்மா:— அவர் பெரிய வைதீகராயிற்றே! ஏதாவது சொன்னால்......!

பானு:— அவருடைய ஒரே பிள்ளையான பானுவை இழக்க வேண்டியது தான்.

பத்மா:— அப்படி யொன்றும் நிர்த்தாட்சண்யமாக பேசிவிடாதீர் கள்.

பானு:— இல்லை பத்மா. அவர் ஒரு பணப்பேய்; எப்பொழுதும் பணந்தான் அவருடைய குறி. எனக்குக் கல்யாணம் செய்து அதன் மூலமாக ஏதாவது சொத்து கிடைக்குமா என பார்ப்பார். அதனால்தான் சொன்னேன் சரி நேரமாகிறது போவோமா?

பத்மா:— நானும் தங்களுடன் வீட்டிற்கு வருகிறேன். தங்கள் தகப்பனார் என்ன முடிவு சொல்கிறார்கள் எனத் தெரிந்து கொண்டு செல்கிறேன்.

பானு:— அதுவும் நல்லது தான். புறப்படு. அதோ அந்த ஓட்டலில் சாப்பிட்டு விட்டு போவோம்.

[இரவு மணி எட்டு அடிக்கிறது இருவரும் ஒரு காப்பி கிளப்பில் சாப்பிட்டு விட்டு உல்லாசமாக பானுவின் வீட்டைநோக்கி நடக்கின்றனர்]

காட்சி 2

இடம்:— பானுவின் வீடு.

[பானுவின் தகப்பனார் பரமசிவம் பிள்ளை வீட்டிற்குள் உட்கார்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்கிறார். பானுவும் பத்மாவும் மெதுவாக வீட்டிற்குள் நுழைகின்றனர்]

பானு:—(மெதுவாக) பத்மா இங்கே இரு. நான் கொஞ்ச நேரம் கழித்து வருகிறேன்.

பத்மா:— நீங்கள் சாந்தமாக பேசுங்கள்

(பானு உள்ளே போகிறான்)

ப. பிள்ளை:— பானு, ஏண்டா இவ்வளவு நேரம்.

பானு:— இல்லெப்பா. என் சிநேகிதன் வீட்டிலே ஒரு விருந்து அதுக்கு போயிருந்தேன்.

ப. பிள்ளை:— என்னடா விருந்து.

பானு:— அவனுக்குக் கல்யாணம்

ப.பிள்ளை:— ஓகோ. கல்யாணமா, நான்கூட. உனக்கு இந்த வருடத்திலே கல்யாணம் செய்து விடலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். உன் அபிப்ராயம் என்ன?

பானு:—தங்கள் அபிப்ராயத்திற்கு மாறுதல் இல்லையப்பா. ஆனால் பெண்.

ப. பிள்ளை:— பெண்ணு! பெண்ணைப்பற்றி என்னடா கவலை. கோட்டையூர் கோடீசுவரன் பிள்ளை தன் ஒரே மகளைத் தருவதாக சொல்லி ஜாதகம் அனுப்பியிருக்கிறார். அவர் சொத்து பத்து லட்சமும் உனக்குத் தான்

பாலு:—பணம் பணம், என்று ஏன் பறக்கின்றீர்கள். நமக்கு இருக்கும் சொத்திற்குத்தான் இன்னும் பத்து தலைமுறைகளுக்கு போதுமேப்பா. எனக்கு இஷ்டப்பட்ட பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள அனுமதி தாருங்கள்.

ப.பிள்ளை:-நீபார்க்கிற பெண்ணை என்னடா லேசா சொல்றே. பெண் பார்க்கிறது சுலபமான காரியமா? குலம் கோத்திரம் எல்லாம் பொருந்த வேண்டாமா. பெரியவர்கள் சும்மா சொன்னார்கள். பெண்பார்க்க ஒருஜோடி செருப்பு தேயுமென்று.

பாலு:- இல்லெப்பா. செருப்பு தேயாமலே நான் முடித்து விட்டேன்.

ப.பிள்ளை:— முடித்து விட்டாயா, என்னடா வேடிக்கையா பேசறே?

பாலு:— விளையாட்டல்ல உண்மை தான், பெண் மிகவும் நல்லவள். நன்றாகப்படித்தவள் இன்னமும் காலேஜில் படித்துக் கொண்டிருக்கிறாள். மிக அழகாகவும் இருப்பாள்.

ப. பிள்ளை:— இதென்னடா. கதையா சொல்றே?

பாலு:— இல்லையப்பா, நடப்பதை கூறுகிறேன் அவள் தான் தங்கள் சம்மதத்தையும் விரைவில் கேட்கச்சொன்னாள். நீங்கள் ஒரு தடவை அவளைப். பார்த்தால் நீங்களும் ஒத்துக் கொள்வீர்கள். அவ்வளவு நல்லவள்.

ப. பிள்ளை:—நன்றாக இருக்கிறதே! நம்சமூகத்திலேயே இல்லாத வழக்கம். நல்ல வேளையாக பிறர் யாரும் இங்கில்லை. அவர்கள் காதில் விழுந்தால் உன் யோக்கியதைக்கு விழுந்து, விழுந்து, சிரிப்பார்கள்.

[அடுத்தவாரம்]

எமதர்மரின் தொடர்ச்சி

விழுவது போன்று கைதட்டுதலும், ஆமோதிப்பும், சபாஷ், சபாஷ், கேளுங்கள் கேளுங்கள் என்ற கோஷங்களும் கிளம்பின.

இதைக்கண்ட முருகன், தான் கொண்டு வந்த தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

எமதர்மன் தீமானம்

(I. A.) "ஆறுகெட நாணலிடு ஊருகெட பூணுலிடு" என்பதற்கேற்ப நாட்டை (பூலோகத்தை)க் கெடுத்து வாழும் பார்ப்பனீய ஆணவம் கடைசியாக தேவலோகத்தாரிடமும் வால் நீட்டத் தொடங்கி விட்டதினால் ஏற்பட்டுள்ள விபரீதத்தைக் கண்டு இச்சபை வருந்துவதுடன், பார்ப்பனீயத்தின் செய்கையையும் வன்மையாகக் கண்டிக்கிறது.

(B) "கடவுளர் பிரதிபிம்பங்களாக பூலோகத்தில் வீற்றிருப்பவர்கள் தங்களது இல்லங்களை (கோயில்களை) விட்டு வெளியே உலாவச் செல்லும்போது (உற்சவங்களில்) அமர்ந்துவரும் எந்த வாகனங்களிலும், கோயில்பூசாரிகளாகிய பார்ப்பனர்கள், இனி ஏறிஉட்காருவதால், வீண் தொல்லைகளும் அரிஅரன்போன்றமுதல் வரிசையிலுள்ள தெய்வங்களுக்கே ஆபத்தும் வருவதால், இனி பார்ப்பனர்கள் அவ்விதம் அமர்வது கூடாதென்பதை அதிகாரப் பூர்வமாக இச்சபை தீர்மானிப்பதுடன், உடனடியாக அமுலுக்கும் கொண்டு வருகிறது"

(C) இவ்வுத்திரவை மீறி கோயில் பார்ப்பனர்கள், மேலும் கடவுளர் பேரால் ஜாதியின் பேரால் விடாப் பிடிவாதம் செய்து வம்பை வளர்ப்பார்களேயானால்; தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும்; பூலோகத்திற்கு மட்டுமல்லாது ஈரேழு பதினான்கு லோகங்களுக்கும் எச்சரிக்கை செய்கிறது. இவ்வுத்திரவை ஒவ்வொரு சர்க்காரும், சிறப்பாக நேரு சர்க்காரும், குறிப்பாக ஓமந்தூரார் ஆட்சியும் கவனத்தில் வைக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறது"

(D) கோயில் பூசாரிகளாகிய பார்ப்பனர்களின் இச்செய்கையினால் எதிர்காலத்தில் இன்னும் பல நெருக்கடிகள் ஏற்படாதிருக்க வேண்டியும், உலக முற்போக்கு சக்தி வளர்ந்து வருவதையொட்டியும், இனி கடவுள்களுக்கு கும்பாபிஷேகம் முதல் பஞ்சாமிர்த அபிஷேகம் வரை செய்வித்தல்கூடாதென்பதுடன், காணிக்கைமுதலியனவும்செலுத்துதல் வேண்டாம். அவைகள் தேவலோகத்தில் வந்து சேருவதில்லையென்பதை உலக மக்களுக்கும், குறிப்பாக தென் நாட்டவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது."

இத்தீர்மானங்களை, சபை முழுமனதுடன் நிறை வேற்றிய பின் எமதர்மன் திறமையைப் பற்றி அனைவரும் பாராட்டினர்.

மேலும் பல உறுப்பினர்கள் அவசர தீர்மானங்களைக்கொண்டு வந்தனர் அடுத்த கூட்டத்தில் விவாதிக்கலாமென்றுகூறி, சபைத் தலைவர் கால வரையின்றி சட்ட சபையை ஒத்திவைத்தார். சபையிலிருந்து "வாக் அவுட்" செய்த விநாயகரை சமாதானப் படுத்துமாறு சிவனும் பார்வதியும் கேட்டுக்கொள்ள, நாரதர் அவரைத் தேடிவர அவசரமாகச் சென்றார்.

Edited & Published by N. V. Natarajan at Dravidan Office 6, Sunkurama Chetty St., Madras & Printed by T. M. Parthasarathy at Mercantile Press, 2-45, Muthumari Chetty St, Mannady, Madras.